**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : வான்மதி**

**தேதி : 19.04.2026 – ஞாயிற்றுக்கிழமை** **நேரம் : மாலை 6.10 மணி**

---------------------------------------------------------------------------------------------

*தலைப்புச் செய்திகள்*

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் 2 நாள் அரசு முறை பயணமாக இலங்கை சென்றுள்ளார்.

தமிழகத்தில் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள், எம்பி., எம்எல்ஏக்கள் ஆவதை திமுக விரும்பவில்லை என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மகளிர் இடஒதுக்கீட்டு மசோதாவை நிறைவேற்றாமல் தொகுதி மறு சீரமைப்பு மசோதாவை நிறைவேற்ற மத்திய அரசு முயற்சி செய்ததாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி குற்றம் சாட்டினார்.

ஆரோக்கியமான கல்லீரல் மற்றும் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு சிறந்த உணவுகளையும், பயிற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய சுகாதார அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா கேட்டுக்கொண்டுள்ளார்.

*சி.பி. ராதாகிருஷ்ணன் -1 (03)*

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று 2 நாள் அரசு முறை பயணமாக இலங்கை சென்றுள்ளார். அவர் இலங்கை செல்லும் முதலாவது பயணம் இதுவாகும். இது குறித்து மேலும் சில தகவல்கள்…

*சி.பி. ராதாகிருஷ்ணன் -2 (11)*

குடியரசு துணை தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று காலை தனது இரண்டு நாள் இலங்கை பயணத்தை தொடங்கினார். அவரை, இலங்கை அதிபர் திரு. அனுர குமார திசநாயக்கே, பிரதமர் திருமதி ஹரிணி அமர சூரிய மற்றும் இதர தலைவர்கள் மற்றும் இலங்கை மாகாணத்தின் வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களைச் சேர்ந்த தலைவர்கள் கலந்து கொண்டு உரையாடினர். கொழும்பில் குடியரசு துணைத் தலைவர், இந்திய வம்சாவளியினரிடையே உரையாடினார். தொடர்ந்து, இந்தியாவின் வீட்டு

வசதி திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட 50 ஆயிரத்திற்கும் வீடுகளை அவர் பல்வேறு சமூக மக்களிடம் வழங்கினார். அவரது இந்தப் பயணம் இருநாட்டு மக்களிடையே நீண்ட கால கலாச்சார மற்றும் உறவுகளை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*சி.பி. ராதாகிருஷ்ணன் -3 (06)*

நிகழ்ச்சியில் இந்தியா வீடு கட்டும் திட்டத்தின் 3ஆவது கட்டத்தின் நிறைவாக மத்திய அரசு உதவியுடன் பல்வேறு சமூகத்திற்காக கட்டப்பட்ட வீடுகளை பயனாளிகளிடம் அவர் காணொளி காட்சி மூலம் வழங்குகிறார். இதன் மூலம் 50 ஆயிரம் பேர் பயன் பெறுவர். மேலும் தற்போது இத்திட்டத்தின் கீழ் 4ஆம் கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் கூடுதலாக 10 ஆயிரம் வீடுகள் கட்டப்படவுள்ளன.

*பிரதமர் -கோவை (16)*

தமிழகத்தில் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள், எம்பி., எம்எல்ஏக்கள் ஆவதை திமுக விரும்பவில்லை என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். கோவையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், பெண்களுக்கு நாடாளுமன்றங்களில் 33 சதவிகித இட ஒதுக்கீட்டை வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்ததாக கூறினார். சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களுக்கு வரவேண்டும் என்பதே தமது அரசின் நோக்கம் என்று அவர் கூறினார். இந்த மசோதாவை மக்களவையில் நிறைவேற்ற விடாமல், திமுக உள்ளிட்ட கட்சிகள் தடுத்து விட்டதாகவும் அவர் கூறினார். பெண்களுக்கு அதிகாரம் கொடுப்பதை திமுக விரும்பவில்லை என்றும் அவர் கூறினார். தற்போது, திமுகவின் உண்மையான முகத்தை மக்கள் அறிந்து கொண்டதாகவும் அவர் தெரிவித்தார். பெண்களுக்கு அதிகாரமளிக்கும் தங்களது போராட்டம் தற்போது வரை தொடர்வதாகவும், தேசிய ஜனநாயக கூட்டணி அரசு மசோதாவை நிறைவேற்ற தொடர்ந்து போராடும் என்றும் அவர் தெரிவித்தார்.

*ராகுல் காந்தி தேர்தல் பிரச்சாரம் (08)*

மகளிர் இடஒதுக்கீட்டு மசோதாவை நிறைவேற்றாமல் தொகுதி மறு சீரமைப்பு மசோதாவை நிறைவேற்ற மத்திய அரசு முயற்சி செய்ததாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி குற்றம் சாட்டினார். திருச்சியில் நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் பங்கேற்றுப் பேசிய அவர், மகளிர் இட ஒதுக்கீடு என்ற பெயரை பயன்படுத்தி தொகுதி மறு சீரமைப்பு மசோதாவை நிறைவேற்ற மத்திய அரசு விரும்பியதாக அவர் தெரிவித்தார். எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து செயல்பட்டு இத்திட்டத்தை தோற்கடித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

*கல்லீரல் தினம் ஜே.பி. நட்டா (11)*

ஆரோக்கியமான கல்லீரல் மற்றும் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு சிறந்த உணவுகளையும், பயிற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா கேட்டுக்கொண்டுள்ளார். உலக கல்லீரல் தினமான இன்று அவர் தமது சமூக ஊடகப்பதிவில் ஆரோக்கியமான கல்லீரல், ஆரோக்கியமான வாழ்க்கைக்கு அவசியம் என்று தெரிவித்துள்ளார். மனித உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பதிலும், ஒவ்வொரு நாளும் உடலை பராமரிப்பதிலும், கல்லீரலின் முக்கியப் பங்கை அவர் நினைவூட்டினார். சத்தான உணவை உண்ணுதல், உடல் ரீதியாக சுறுசுறுப்புடன் இருப்பது போன்ற எளிய பழக்க வழக்கங்கள் மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார்.

*ராஜ்நாத் சிங் ஜெர்மன் (13)*

மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் 3 நாள் அரசு முறை பயணமாக வருகிற செவ்வாய்க்கிழமை முதல், ஜெர்மனி நாட்டிற்குச் செல்லவுள்ளார். ஜெர்மனியில் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து விவாதிக்கவும், இருநாடுகள் உடனான ஒத்துழைப்பு ஆகியவை குறித்து விவாதிப்பதற்காக அவர் ஜெர்மனி செல்லவுள்ளார். தமது பயணத்தின்போது அவர், ஜெர்மனி நாட்டின் அதிபர் திரு. போரிஸ் பிஸ்டோரியசஸுடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். பாதுகாப்பு மற்றும் தொழில்துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்தவும், செயற்கை நுண்ணறிவு மற்றும் ட்ரோன்கள் போன்ற களங்களில் ஒத்துழைப்புகளை மேம்படுத்தவும் விவாதங்கள் நடத்தவுள்ளார். மேலும், மேக் இன் இந்தியா திட்டத்தின் கீழ் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் ஜெர்மன் பாதுகாப்புத்துறையின் முக்கிய பிரதிநிதிகளுடன் அவர் கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

*மோடி – பவன் கல்யாண் (08)*

ஆந்திர பிரதேச மாநிலத்தின் துணை முதலமைச்சர் திரு. பவன் கல்யாணுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி தொலைபேசியில் அவரது உடல் நலம் குறித்து ஆலோசனை நடத்தினார். இது தொடர்பாக அவர் தமது சமூக ஊடகப்பதிவில், திரு. பவன் கல்யாணுடன் அவரது உடல்நலம் குறித்து பேசியதாக பிரதமர் தெரிவித்துள்ளார். அவர் விரைவில் குணமடைவார் என்றும், அவர் தெரிவித்துள்ளார். திரு. பவன் கல்யாண் நேற்று மாலை அறுவை சிகிச்சை செய்து கொண்டார். கடந்த சில மாதமாக அவர் உடல் நிலை சரியில்லாமல் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

*அக்ஷய திருதியை -மோடி (07)*

அக்ஷய திருதியை முன்னிட்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடகப் பதிவில், நல்லொழுக்கங்கள், தொண்டு மற்றும் சேவையின் பாதையில் பயணிக்க இந்த பண்டிகை ஊக்குவிப்பதாக அவர் தெரிவித்துள்ளார். இந்தப் பண்டிகை அனைவரது வாழ்விலும் மகிழ்ச்சியையும், வளம் மற்றும் நல்ல ஆரோக்கியத்தையும் கொண்டு வரவேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

*மேற்கு வங்கம் - மோடி (17)*

நாட்டின் வளர்ச்சிக்குப் பெண்கள் அதிக எண்ணிக்கையில் அரசியலில் ஈடுபட வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். அவர், இன்று மேற்கு வங்க மாநிலத்தின் பாங்குரா மாவட்டத்திலுள்ள பிஷ்ணுபூரில் நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் பங்கேற்றுப் பேசினார். வரும் 2029ஆம் ஆண்டில் பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்படுவதை தடுக்க திரிணாமுல் காங்கிரஸ், காங்கிரஸ் கட்சியுடன் சேர்ந்து சதி செய்தது என்றும், அவர் கூறினார். மக்கள் அவர்களுக்கு வரும் தேர்தலில் பாடம் புகட்டுவார்கள் என்றும் அவர் குற்றம் சாட்டினார். நாட்டின் வளர்ச்சியை உறுதி செய்ய அதிக பெண்கள் அரசியலுக்கு வரவேண்டும் என்றும் அவர் கூறினார். அரசு அவர்களின் பாதுகாப்பிற்கு போதிய நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் தெரிவித்தார். திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் காங்கிரஸ் ஆகிய இரண்டு கட்சிகளும் பழங்குடியின மக்களுக்கு எதிரானது என்றும் பிரதமர் தெரிவித்தார். இவ்விரு கட்சிகளும் குடியரசு தலைவர் தேர்தலின்போது குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வுக்கு எதிராக வேட்பாளரை நிறுத்தியதாக அவர் தெரிவித்தார். தொடர்ந்து புருலியாவில் நடந்த தேர்தல் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர்,

*மேற்கு வங்கம் - மோடி – 2 (09)*

திரிணாமுல் காங்கிரஸ் ஆட்சியில் நடந்த ஊழல் மற்றும் அட்டூழியங்கள் மேற்கு வங்க மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக குற்றம் சாட்டினார். தற்போது மக்கள் பாஜக மீது நம்பிக்கை வைத்துள்ளதாகவும், நாட்டில் பழங்குடியினர் விவகாரங்களுக்காக தனி அமைச்சகத்தை அரசு உருவாக்கி அவர்களின் வளர்ச்சிக்கு நிதி ஒதுக்கியுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார். திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் கீழ் அமைந்துள்ள சில பழங்குடியினர் ஆதிக்கம் செலுத்தும் மாவட்டங்கள், வளர்ச்சி மற்றும் அடிப்படை வசதிகளில் பின்தங்கியுள்ளதாக அவர் குற்றம் சாட்டினார்.

*சென்னை தேர்தல் விழிப்புணர்வு (04)*

தமிழகத்தில் சென்னை உள்ளிட்ட இடங்களில் இன்று காலை வாக்காளர் விழிப்புணர்வு ஓட்டம் நடைபெற்றது. இந்த பேரணியை தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தொடங்கி வைத்தார். இது குறித்த கூடுதல் தகவல்கள்…

*சென்னை தேர்தல் விழிப்புணர்வு (06)*

வரும் 23ஆம் தேதி பொதுமக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு வாக்களிக்க வேண்டும் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் கேட்டுக்கொண்டார். தமிழகத்தில் தேர்தலையொட்டி அவர் இன்று விழிப்புணர்வு பேரணியை தொடங்கி வைத்தார். வரும் 23ஆம் தேதி நடைபெறவுள்ள தேர்தலையொட்டி வாக்குச்சாவடிகள் அனைத்தும் எளிதில் அணுகக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். மேலும், தேர்தல் நியாயமாகவும், வெளிப்படையாகவும் நடைபெற உறுதி செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

*தமிழகம் (15)*

தமிழகத்தில் வரும் 23ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அரசியல் கட்சியினரின் தேர்தல் பிரச்சாரம் உச்சகட்டத்தை எட்டியுள்ளது. பிஜேபி வேட்பாளர்களை ஆதரித்து அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. அமித்ஷா ஈரோடு மாவட்டம் சிவகிரியிலும், அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. ராஜ்நாத் சிங் தென்காசி மாவட்டத்திலும் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திலும் பங்கேற்றுள்ளனர். திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் தேர்தல் அறிக்கையை வெளியிட்டு A.I. மற்றும் animation துறையில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று கூறினார். அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி பழனிசாமி, மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை எதிர்த்ததன் மூலம் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட கட்சிகள் மகளிருக்கு எதிரான நிலைப்பாட்டை கடைபிடித்ததாக தெரிவித்தார். தவெக கட்சித் தலைவர் திரு. விஜய், திருச்சி கிழக்கு தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் இன்று நடைபெறும் சாலை பிரச்சாரக் கூட்டங்களில் பங்கேற்கிறார்.

*ஜோஷி (16)*

மகளிர் இட ஒதுக்கீடு மசோதா தொடர்பாக நாடு முழுவதும் காங்கிரஸ் கட்சி பெண்களை ஏமாற்றியுள்ளதாக மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சர் திரு.பிரல்ஹாத் ஜோஷி

தெரிவித்துள்ளார். தொகுதி மறு சீரமைப்பின்போது தென்னிந்திய மாநிலங்களின் தொகுதி பிரதிநிதித்துவம் குறையும் என்றும் காங்கிரஸ் கட்சி பொய்யான பிரச்சாரத்தை பரப்புகிறது என்றும் அவர் குற்றம் சாட்டினார். திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தொகுதி மறு சீரமைப்பு குறித்து முறையான தகவல்களை வழங்கியபோதிலும், பெண்கள் இட ஒதுக்கீட மசோதாவை தடுக்கும் வகையில் எதிர்க்கட்சிகள் இந்த மசோதாவை தடுத்ததாக அவர் குற்றம் சாட்டினார். ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் போது கடந்த 2010ஆம் ஆண்டில், நாடாளுமன்றத்தில் மகளிர் இட ஒதுக்கீடு மசோதா அறிமுகப்படுத்தியபோது, பாஜக இந்த மசோதாவை முழுமையாக ஆதரித்தது என்றும் அவர் கூறினார். இருப்பினும் கூட்டணி கட்சிகளின் எதிர்ப்பு காரணமாக, காங்கிரஸ் அதை முன்னோக்கி எடுத்துச் செல்ல தயாராக இல்லை என்றும் அவர் கூறினார்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் 2 நாள் அரசு முறை பயணமாக இலங்கை சென்றுள்ளார்.

தமிழகத்தில் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள், எம்பி., எம்எல்ஏக்கள் ஆவதை திமுக விரும்பவில்லை என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மகளிர் இடஒதுக்கீட்டு மசோதாவை நிறைவேற்றாமல் தொகுதி மறு சீரமைப்பு மசோதாவை நிறைவேற்ற மத்திய அரசு முயற்சி செய்ததாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி குற்றம் சாட்டினார்.

ஆரோக்கியமான கல்லீரல் மற்றும் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு சிறந்த உணவுகளையும், பயிற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய சுகாதார அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா கேட்டுக்கொண்டுள்ளார்.